

சென்னை கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலக கூட்ட அரங்கில் நேற்று (11.05.2023) செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், பத்திரிகையாளர் நல வாரிய உறுப்பினர்களுக்கு உறுப்பினர் அட்டையினை வழங்கினார். இந்நிகழ்வில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு. பெ. சாமிநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா,சட்டமன்ற உறுப்பினர் ஜெ.ஜான் எபினேசர், துணை மேயர் மு.மகேஷ்குமார் மற்றும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு.இரா. செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த. மோகன், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்குநர் மு.அருணா ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் 2023–24ஆம் நிதியாண்டின் அறிவிப்புகளை செயல்படுத்தும் வகையில் நேற்று (11.5.2023) சென்னை, தியாகராயர் நகர், சோமசுந்தரம் விளையாட்டு மைதானத்தை ரூ.10 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்துவது தொடர்பாக இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று கள ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர். பிரியா , வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, தியாகராய நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா, பெருநகர சென்னை மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் ஷேக் அப்துல் ரஹ்மான், மண்டலக் குழுத்தலைவர் கிருஷ்ணமூர்த்தி, சி.எம்.டி.ஏ. தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் பெரியசாமி, ருத்ரமூர்த்தி, மாநகராட்சி மற்றும் துறை அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

## தமிழ்நாட்டில் நடக்கும் அரசு

# பத்திரிகையாளர்களுக்கு முக்கியத்துவம் தருகின்ற அரசு!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

*சென்னை, மே 12-*

*பத்திரிகையாளர் நல வாரிய உறுப்பினர்களுக்கு உறுப்பினர் அட்டை, பணிக்காலத்தில் உயிரிழந்த அரசு அச்சகப் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள், 1 இலட்சத்து ஒன்றாவது தமிழரசு இதழ் சந்தாதாரருக்கு தமிழரசு இதழை வழங்கி இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அரசு அச்சகப் பணியாளர்களுக்கான புதிய குடியிருப்புகளுக்கு அடிக்கல் நாட்டினார்.*

*இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் ஆகியோர் முன்னிலையில், பத்திரிகையாளர் நல வாரியத்தின் சார்பில் 7 பத்திரிகையாளர்களுக்கு நலவாரிய உறுப்பினர் அட்டையினையும், பணிக்காலத்தில் உயிரிழந்த அரசு அச்சகப் பணியாளர்களின் வாரிசுதாரர்கள் 8 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளையும், 1 இலட்சத்து ஒன்றாவது தமிழரசு இதழ் சந்தாதாரருக்கு தமிழரசு இதழையும் வழங்கி சென்னை தண்டையார் பேட்டை காமராஜர் நகர், அரசு அச்சகப் பணியாளர்களுக்கு 96 புதிய குடியிருப்புகள் ரூ.34.49 கோடி மதிப்பீட்டில் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டினார்.*

*பின்னர் இதில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய விழாப் பேருரை:*

*தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையின் சார்பாக, பத்திரிகையாளர் நல வாரிய உறுப்பினர் அட்டை வழங்குகின்ற நிகழ்ச்சி மற்றும் அரசு அச்சக பணியாளர்களுக்கான நவீன வசதியுடன் 34.49 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இங்கே அடிக்கல் நாட்டியிருக்கக்கூடிய 96 குடியிருப்புகள் மற்றும் கருணை அடிப்படையிலான பணி நியமன ஆணை வழங்குகின்ற நிகழ்ச்சி மற்றும் தமிழரசு இதழினுடைய ஒரு இலட்சத்து ஒன்றாவது சந்தா வழங்குகின்ற இந்த நிகழ்ச்சி ஒரு சிறப்பான நிகழ்ச்சி. உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய வாழ்த்துகளையும் வணக்கத்தையும் முதலில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*கழக அரசு தேர்தல் அறிக்கையிலே சொன்னபடி, பத்திரிகையாளர் நல வாரியம் அமைக்கும் பணி இன்று தொடங்கப்பட்டிருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் தேர்தல் அறிக்கையில் சொன்ன ஒவ்வொரு வாக்குறுதியையும் ஒவ்வொரு நாளாக நாங்கள் நிறைவேற்றி வருகின்றோம். அதன் ஒரு பகுதியாக இன்று, தேர்தல் அறிக்கையில் சொன்ன வாக்குறுதியைக் காப்பாற்றியிருக்கிறோம், நிறைவேற்றியிருக்கிறோம்.*

*பத்திரிகையாளர் நலன் சார்ந்த அரசாக என்றுமே நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசு செயல்பட்டு வருகிறது. ஆட்சிக்கு வந்ததும், தேர்தல் அறிக்கையில் சொன்னதுபோல, சென்ற அரசால் போடப்பட்ட அத்தனை அவதூறு வழக்குகளையும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அரசாணை வெளியிட்டு இரத்து செய்தார். அதேபோல, கொரோனா நேரத்தில், பத்திரிகையாளர்களை முன்களப் பணியாளர்களாக அறிவித்தது மட்டுமல்லாமல், அவர்களுக்கெல்லாம் 5000 ரூபாய் நிதி உதவி கிடைக்கச் செய்ததும் நம்முடைய அரசு. தொடர்ந்து, பத்திரிகையாளர்களுக்காக சேவை செய்ய நம்முடைய அரசு காத்துக் கொண்டிருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும்.*

*அதேபோல் இன்று இந்த நிகழ்ச்சிக்கு பொதுவாக பத்திரிகையாளர்களெல்லாம் வந்திருக்கிறீர்கள், மூத்த பத்திரிகையாளர்களும் வந்திருக்கிறீர்கள். மற்ற நிகழ்ச்சிகள், மற்ற துறை நிகழ்ச்சிகளையெல்லாம் நீங்கள் அந்த நிகழ்ச்சியின் செய்தியை சேகரிப்பதற்காக வருவீர்கள். ஒவ்வொரு பத்திரிகையிலும் ஒவ்வொரு அளவில் வரும், ஒவ்வொரு கோணத்தில் வரும், சில சமயம் வராமல் கூட போய்விடும். ஆனால் இன்றைக்கு உங்களுடைய நிகழ்ச்சி. இந்த நிகழ்ச்சியின் செய்தியை நீங்கள் சேகரிக்காமல் இருக்க முடியாது.*

*இன்னும் சொல்லப்போனால், இன்றைக்கு வேறொரு மிக முக்கியமான நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கிறது, ஒரு புதிய அமைச்சர் பதவியேற்று இருக்கிறார். அந்த நிகழ்ச்சியை விட்டுவிட்டு இந்த நிகழ்ச்சியில் செய்தி சேகரிப்பதற்கு வந்திருக்கிறீர்கள். எனவே, அந்தளவிற்கு இந்த நிகழ்ச்சி ஒரு முக்கியமான நிகழ்ச்சி தான். நேற்று நம்முடைய அமைச்சர் சாமிநாதன் அவர்கள் இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து, உடனே இந்த அரசு நிகழ்ச்சியை நடத்த வேண்டும் என்று இந்த நிகழ்ச்சியை நடத்தியிருக்கிறார் என்றால், பத்திரிகையாளர்களுக்கு இந்த அரசு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறது என்பதை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன்.*

*எப்போதும் போல நீங்கள் தொடர்ந்து இந்த அரசுக்கு துணைநின்று, ஏதாவது தவறு நடந்தால் அதை சுட்டிக்காட்டி, நல்லது செய்தால் எங்களை தட்டிக்கொடுத்து நீங்களெல்லாம் உங்களுடைய பணியை தொடர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, வந்திருக்கக்கூடிய அத்தனை பேருக்கும் என்னுடைய வாழ்த்துகளையும், வணக்கங்களையும் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகின்றேன்.*

*இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கூறினார்.*

*இதில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆற்றிய தலைமையுரை வருமாறு:*

*தமிழ்நாடு அரசின் அச்சகத் துறை சார்பாகவும் நடைபெறுகிற இந்த சிறப்பு வாய்ந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, எங்களுடைய அழைப்பை ஏற்று அதுவும் குறுகிய காலத்தில் அழைப்பு விடுத்தவுடன் உடனடியாக ஒப்புக்கொண்டு வருகை தந்து, இந்த நிகழ்ச்சியை சிறப்பித்திருக்கிற நம்முடைய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அன்பிற்கினிய சகோதரர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை வருக, வருக என வரவேற்க கடமைப்பட்டிருக்கிறேன்.*

**புதிய குடியிருப்புகள்**

*பத்திரிகையாளர் நல வாரியத்தில், நம்முடைய தேர்தல் அறிக்கையில் அறிவித்தவாறு, முதன் முதலாக இன்றைக்கு இந்த நலவாரிய உறுப்பினர் அட்டை வழங்குகிற நிகழ்ச்சியும் நடைபெறுகிறது. இந்த நிகழ்ச்சியில் அட்டை பெற வருகை தந்திருப்பவர்களையும், அதேபோல இந்த அரசு பொறுப்பேற்று ஏறத்தாழ தமிழரசு இதழில் 20,000 உறுப்பினர்களை இந்த இரண்டாண்டு காலத்திலே சேர்க்கப்பட்டு, இன்றைக்கு ஒரு இலட்சத்து ஒன்றாவது உறுப்பினருக்கு முதல் இதழை வழங்குகிற நிகழ்ச்சியாகவும், அதேபோல, அச்சகத்தில் பணியாற்றக்கூடிய பணியாளர்களுக்கு ஏறத்தாழ 60 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட குடியிருப்புகள் பயனற்றுப் போயிருந்த நேரத்தில், நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, புதிய குடியிரு ப்புகள் கட்டுவதற்கு இன்றைக்கு ஏறத்தாழ 35 கோடி ரூபாய் அளவிற்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது.*

*அதேபோல, அச்சுத் துறையில் பணிபுரியக்கூடிய, பணியில் இருக்கும்பொழுது உயிரிழந்த அந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு வேலை வழங்கும் நிகழ்ச்சியாகவும், இந்த நிகழ்ச்சி நடைபெறுகிறது. அதுவும் குறுகிய காலத்திலே, நேற்றைக்கு காலையில் முடிவு செய்து, இந்த நிகழ்ச்சியை சிறப்பாக ஒருங்கிணைத்திருக்கிற அரசுச் செயலாளர், செய்தித்துறை இயக்குநர், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்குநர் மற்றும் அவர்களுடன் இணைந்து பணியாற்றிய கூடுதல் இயக்குநர் உள்ளிட்ட அத்துணை அரசு அலுவலர்களுக்கும் பணியாளர்களுக்கும் இந்த நேரத்தில் துறையின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*இவ்வாறு அமைச்சர் பெ. சாமிநாதன் கூறினார்.*


*இந்த நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர் மரு. இரா.செல்வராஜ், வரவேற்புரை ஆற்றினார், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்குநர் திருமதி மு.அருணா நன்றி தெரிவித்தார்.*

*இந்த நிகழ்ச்சியில், நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் ஜெ.ஜான் எபினேசர், துணை மேயர் மு.மகேஷ்குமார், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் த. மோகன், பத்திரிகையாளர் நல வாரிய அலுவல் சாரா உறுப்பினர்கள் எஸ்.கவாஸ்கர், திருமதி லெட்சுமி சுப்பிரமணியன், நல வாரிய உறுப்பினர்கள் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.*

## புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கை

# மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம்!

## அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் அறிக்கை!



*சென்னை, மே 12 -*

*வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமசந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*இந்திய வானிலை ஆய்வு மையம், இன்று 11.05.2023 காலை வெளிட்டுள்ள அறிவிக்கையில், தெற்கு அந்தமான் கடல் பகுதியில் நிலை கொண்டிருந்த ஆழ்ந்த காற்றழுத்த மண்டலம், தீவிர புயலாக மாறி வடக்கு வடகிழக்குத் திசையில் நகர்ந்து வருவதாகவும் இதற்கு மோக்கா என பெயரிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.*

*இது மேலும், அதி தீவிர புயலாக உருவெடுத்து மத்திய வங்கக்கடல் பகுதியினை கடந்து 13.05.2023 அன்று சற்று வலுவிழந்து 14.05.2023 அன்று 120 - 145 கி.மீ. / மணி வேகத்துடன் வங்க தேசம் மற்றும் மியான்மர் இவற்றுக்கு இடைப்பட்ட பகுதியில் கரையைக் கடக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*முதலமைச்சர் அவர்களது அறிவுரையின்பேரில் பின்வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.*

*மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்பு எச்சரிக்கையின்படி, மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து மீன்வளத் துறை ஆணையர் அவர்களுக்கும், கடலோர மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் சென்னை பெருநகர ஆணையர் அவர்களுக்கும் விளக்கமான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.*

*மீனவர்கள், படகுகள், விசைப்படகுகள், பயணியர்கள் வங்காள விரிகுடா மற்றும் தெற்கு அந்தமான் கடலுக்குள் 14.05.2023 வரை செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.*

*ஏற்கெனவே, கடலுக்குள் சென்ற மீன்பிடி படகுகள் விரைவாக கரைக்கு திரும்புமாறு அறிவுறுத்த ப்பட்டுள்ளது.*

*இவ்வாறு அவர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.*




தலைமைச் செயலகத்தில், நேற்று (11.05.2023) தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா தலைமையில், தொழில் துறையின் அறிவிப்புகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாநில திட்டக்குழுவின் துணைத் தலைவர் பேராசிரியர் ஜெ.ஜெயரஞ்சன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ச.கிருஷ்ணன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின் அரசு சிறப்புச் செயலாளர் திருமதி பூஜா குல்கர்னி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின் அரசு கூடுதல் செயலாளர் திருமதி மரியம் பல்லவி பல்தேவ், டிட்கோ நிறுவனத்தில் மேலாண்மை இயக்குநர் திருமதி ஜெயஸ்ரீ முரளீதரன், தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் சி.காமராஜ், சிப்காட் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி எ. சுந்தரவல்லி, தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர்/தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு, டிட்கோ நிறுவனத்தின் செயல் இயக்குநர் டாக்டர் வி. ஜெய சந்திர பானு ரெட்டி, தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்தின் செயல் இயக்குநர் திருமதி ஆஷா அஜித், சிப்காட் நிறுவனத்தின் செயல் இயக்குநர் நிஷாந்த் கிருஷ்ணா, மற்றும் துறை சாந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ஹூண்டாய் நிறுவன விழாவில் முதல்வர் உரை!

முதல் பக்கத் தொடர்ச்சி

இந்நிறுவனம், சுற்றுச்சூழலுக்கு உகந்த, நீடித்து நிலைக்கத்தக்க தயாரிப்பினை முக்கிய கருப்பொருளாகக் கொண்டு, 15 ஆயிரம் நபர்களுக்கு நேரடியாகவும், 2 இலட்சத்து 50 ஆயிரத்திற்கு அதிகமானோருக்கு மறைமுகமாகவும் வேலை வாய்ப்பை ஏற்படுத்தி உள்ளது.

**தொழில் முதலீடுகள் ஈர்ப்பு அமைச்சரைப் பாராட்டுகிறேன்!**

முதலீடுகளை ஈர்த்து அதன் மூலம் அதிக அளவிலான வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்காக முனைந்து செயல்படும் இந்த அரசின் முயற்சிகளுக்கு இது உறுதுணையாக உள்ளது என்பதால் உங்களை நான் மனதார பாராட்ட விரும்புகிறேன்.

தொழில்துறை அமைச்சராகப் பொறுப்பு வகித்து வந்த, ஏற்கனவே அந்த பொறுப்பில் இருந்த நம்முடைய . தங்கம் தென்னரசு அவர்களும், அவருக்கு உதவியாக இருந்த தொழில் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ச.கிருஷ்ணன், அவர்களும், தொழில் துறை அதிகாரிகளும், இந்திய அளவில் மட்டும் இன்றி, பல்வேறு நாடுகளுக்கும் சென்று முன்னணி தொழில் துறையினரை சந்தித்து பெரும் முதலீடுகளை ஈர்த்து, தமிழ்நாட்டின் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு பேருதவி புரிந்துள்ளனர். அதற்காக, நான் அவர்களை இந்த நேரத்தில் மனதார பாராட்ட விரும்புகிறேன்.

மேலும், இன்றைய தினம், தொழில் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள டி.ஆர்.பி.ராஜா அவர்களும், மிகவும் முனைப்புடன் செயல்பட்டு, அதிக முதலீடுகளை ஈர்ப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வார் என்று நான் உறுதியாக நம்புகிறேன். அவருக்கும் என்னுடைய வாழ்த்துகளை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த நிலையில், உங்களுக்கு நான் ஒன்றை குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது, நிர்வாக காரணங்களுக்காக அமைச்சர்களின் இலாகாக்கள் மாறினாலும், தமிழ்நாடு அரசு, தொழில் துறையினருக்கு அளித்துவரக்கூடிய ஆதரவும், தொழில்துறை வளர்ச்சிக்கு தமிழ்நாடு அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளும் என்றும் தொடரும் என்று இந்த தருணத்தில் நான் கூற விரும்புகிறேன்.

> **ஹூண்டாய் நிறுவனம், இருங்காட்டுக்கோட்டையில் தற்போதுள்ள தொழிற்சாலையினை, உள்நாட்டு மற்றும் உலகளாவிய சந்தைக்கான மின்னூர்தி மையமாக மேம்படுத்தும் என்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகமில்லை. இந்நிறுவனம், சுற்றுச்சூழலுக்கு உகந்த, நீடித்து நிலைக்கத்தக்க தயாரிப்பினை முக்கிய கருப்பொருளாகக் கொண்டு, 15 ஆயிரம் நபர்களுக்கு நேரடியாகவும், 2 இலட்சத்து 50 ஆயிரத்திற்கு அதிகமானோருக்கு மறைமுகமாகவும் வேலை வாய்ப்பை ஏற்படுத்தி உள்ளது.**

தலைவர் கலைஞருடைய ஆட்சியில் தொடங்கப்பட்டு, தமிழ்நாட்டில் பல விரிவாக்கங்களையும், வளர்ச்சித் திட்டங்களையும் மேற்கொண்டு வரும் ஹூண்டாய் நிறுவனம், தற்போது 20,000 கோடி ரூபாய் முதலீடு செய்ய முன்வந்திருப்பது இதுவே சாட்சியாக அமைந்திருக்கிறது. இந்த முதலீடு, தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை 2030ஆம் ஆண்டிற்குள், ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு உயர்த்திட வேண்டும் என்ற நமது இலட்சிய இலக்கினை அடைவதற்கு ஒரு பாய்ச்சலாக அமைந்துள்ளது என்றால் அது மிகையாகாது.

இங்கே வெகு சிறப்பாக இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருக்கக்கூடிய ஹூண்டாய் நிறுவன அலுவலர்களுக்கும், நமது அரசு அலுவலர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். தொழில் துறை நிச்சயமாக ஏற்கனவே முன்னேறி வந்திருக்கிறது. இன்னும் முன்னேறப் போகிறது. அதற்கு இன்னுமொரு உதாரணம் சொல்ல வேண்டுமென்று சொன்னால், நான் கடந்த ஆண்டும் சரி, இப்போது இந்த ஆண்டும் சரி, எந்த நிகழ்ச்சியில் அதிகம் கலந்து கொண்டிருக்கிறேன் என்று சொன்னால், தொழில்துறை நிகழ்ச்சியில்தான் அதிகம் கலந்து கொண்டிருக்கிறேன். அதுவே அதற்கு சாட்சியாக அமைந்திருக்கிறது என்று கூறி, நமது அரசு அலுவலர்களுக்கும், ஹூண்டாய் நிறுவன அலுவலர்களுக்கும், என்னுடைய மனமார்ந்த வாழ்த்துகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்து கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் உரையாற்றினார்.




சுதந்திரப் போராட்ட வீரர்

# வீரபாண்டிய கட்டபொம்மன் விழா

நாள்: 12.5.2023, வெள்ளிக்கிழமை, காலை 9.30 மணி

இடம்: காந்தி மண்டபம், கிண்டி, சென்னை

தமிழ்நாடு அரசின் சார்பில்

சுதந்திரப் போராட்ட வீரர்

**வீரபாண்டிய கட்டபொம்மன்** அவர்களின்

திருவுருவச் சிலைக்கு

**மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள்** மற்றும் சீர்மிகு பெருமக்கள் மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள்.



பாஞ்சாலங்குறிச்சி

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in

**இயக்குநர்,**
செய்தி-மக்கள் தொடர்புத்துறை,
சென்னை - 600 009.

செ.ம.தொ.இ/494/வரைகலை/2023